# இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு

# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

## 2026/2027 ஆண்டுக்கான இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் பிரதான காரியாலயத்தின் சிற்றுண்டிச்சாலை (Canteen) சேவையை வழங்குவதற்கான கொள்முதல்

**ஒப்பந்த இலக்கம் : TRC/ADM/01/24/04/01**

இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் திணைக்கள பெறுகைக் குழு (மேல்நிலை) தலைவரினால் இல.276, எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு - 08, என்ற முகவரியில் அமைந்துள்ள இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு பிரதான காரியாலயத்திற்கு 2026/2027 ஆண்டுக்கான ஒரு வருட காலத்திற்கு சிற்றுண்டிச்சாலை (Canteen) சேவை கொள்முதல் செய்வதற்காக பொருத்தமான மற்றும் தகைமை பெற்ற விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரை குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

இது தொடர்பான ஆர்வமுள்ள தகுதி பெற்ற விலைமனுதாரர்களுக்கு இந்த கொள்முதல் பற்றிய மேலதிக விபரங்களை இல.276, எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு - 08 என்ற இடத்தில் இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் நிர்வாக மற்றும் கூட்டுறவு அலுவல்கள் பிரிவின் பணிப்பாளர் / நிர்வாக மற்றும் கூட்டுறவு அலுவல்கள் இல் பெற்றுக் கொள்ள முடியும். ஆர்வமுள்ள விலைமனுதாரர்களுக்கு 2026.08.14 ஆம் திகதி தொடக்கம் 2026.08.28 ஆம் திகதி வரையான வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 09.00 மணி முதல் பி.ப. 03.00 வரை மீளளிக்கப்படாத விலைமனு கட்டணமாக ரூ.5,000.00 ஐ பணமாக செலுத்தி, இலக்கம்.276, எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு - 08, இல் அமைந்துள்ள இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் நிர்வாக மற்றும் கூட்டுறவு அலுவல்கள் பிரிவின் பணிப்பாளர் / நிர்வாக மற்றும் கூட்டுறவு அலுவல்களிற்கு எழுத்து மூல விண்ணப்பம் ஒன்றை முன்வைத்து, சிங்கள மொழியில் அமைக்கப்பட்டுள்ள முழு விலைமனு ஆவணத் தொகுப்பை கொள்வனவு செய்ய முடியும்.

“மூலப்பிரதி” மற்றும் “நகல்” என அமைக்கப்பட்ட, சரியான முறையில் பூரணப்படுத்தி முத்திரை குறி பொறிக்கப்பட்ட விலைமனு தொகுப்புகள் இரண்டு, கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் “2026/2027 ஆண்டிற்கான இ.தொ.ஒ.ஆ பிரதான காரியாலயத்தின் சிற்றுண்டிச்சாலை சேவை வழங்குவதற்கான கொள்முதல்” எனக் குறிப்பிட்டு, 2026.08.31 ஆம் திகதி பி.ப.2.00 மணி அல்லது அதற்கு முன்னர் நிர்வாக மற்றும் கூட்டுறவு அலுவல்கள் பிரிவு, இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு, இல.276, எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு - 08 என்ற முகவரிக்கு கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்புதல் அல்லது இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் நிர்வாக மற்றும் கூட்டுறவு அலுவல்கள் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் முடியும். விலைமனு ஏற்றுக் கொள்ளல் நிறைவு பெற்ற உடனே 2026.08.31ஆம் திகதி விலைமனுதாரர்கள் அல்லது அவர்களினால் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியின் முன்னிலையில் விலைமனு திறக்கப்படும். குறிப்பிட்ட நிறைவு பெற்ற நேரத்தின் பின் கிடைக்கப்பெறுகின்ற விலைமனுக்கள் தாமதமாக கிடைக்கப்பெற்ற விலைமனுக்கள் எனக் கருதி அவை நிராகரிக்கப்படும். சமர்ப்பிக்கப்படுகின்ற அனைத்து விலைமனுக்களுக்குமான இறுதி தீர்மானம் எடுக்கும் உரிமை இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவிற்கே உரியது.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு (மேல்நிலை),**
**இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு,**
**இல.276, எல்விட்டிகல மாவத்தை,**
**கொழும்பு - 08**

**14.08.2026**